தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2040, மாசி 12

2009 பிப்ரவரி 24, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்"

எண்ணியதைச் செயல்படுத்துவதில் உறுதி உடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவாறே வெற்றி பெறுவார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 51, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

51—

பயிற்சி

***10959—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்வுகளுக்கு சென்னையில் வழங்கி வரும் பயிற்சியை திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் போன்ற மாநகரங்களிலும் நடத்த அரசு ஆவன செய்யுமா?

[2009 பிப்ரவரி 24

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரிசீலனையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருகாலத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் பாராளுமன்ற, மத்திய தலைமைச் செயலகத்தில் அதிகாரிகளாகவும், மிக அதிக எண்ணிக்கையில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ் அதிகாரிகளாகவும் இருந்தார்கள் என்பது வரலாறு. அது நீண்ட நெடுங்காலமாக குறைந்துகொண்டே வந்த காரணத்தினால், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், 2000 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைகள்மூலம் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வுகளுக்கு, நம்முடைய பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைமூலம் பயிற்சி கொடுப்பதற்காக ஏற்பாடு செய்து, அதன்மூலம் ஆண்டு ஒன்றுக்கு 200 பேர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டு, கடந்த ஆண்டுகூட, அந்த 200 பேர்களில் நான்கு பேர் ஐ.ஏ.எஸ். ஆகவும், எட்டு பேர் ஐ.பி.எஸ். ஆகவும் தேர்ச்சி பெற்றார்கள். அதேபோன்று ஐ.ஆர்.எஸ்., ஐ.எப்.எஸ்., போன்ற உயர் பணிகளுக்கான தேர்வில் கிட்டத்தட்ட 22 பேர்கள் தேர்ச்சி பெற்றது தமிழக வரலாற்றில் தலைவர் கலைஞர் நல்லாட்சியில்தான் என்பதை மக்கள் மறக்கவில்லை. ஆகவே, அந்த அடிப்படையில் சென்னையில் Anna Institute of Management மூலம் நடத்துகின்ற ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற உயர் பணித் தேர்வுக்கான பயிற்சியை தமிழ்நாட்டில் முக்கிய நகரங்களான மதுரை, கோயம்புத்தூர், என்னுடைய நெல்லை மாவட்டத்தில் திருநெல்வேலி, திருச்சி, தஞ்சாவூர் போன்ற பெரிய நகரங்களிலும், ஆரம்பித்தால், அந்தப் பகுதியிலுள்ள ஏழையெளிய மாணவ, மாணவியர்கள் மிக அதிகமான விலை கொடுத்து வாங்கக்கூடிய புத்தகங்களை இந்தப் பயிற்சிமூலம் பெற்று, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற தேர்வுகளுக்கு பயிற்சி பெற்று, தலைவர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில் மிக அதிக எண்ணிக்கையில் தேர்வு பெறுவதற்கான வாய்ப்பாக இருக்கும். அதை இந்த அரசு பரிசீலிக்குமா என்று கேட்பதோடு, இந்த ஆண்டே தொடங்குவதற்கு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

2009 பிப்ரவரி 24]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் தெரிவித்ததைப்போல, 2000 ஆம் ஆண்டு முதல் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பணிகளுக்கு பயிற்சி கொடுக்கின்ற பணி தமிழகத்திலே தொடங்கப்பட்டது என்பது உண்மை. அதற்குப்பிறகு, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின்கீழ், Anna Institute of Management மூலமாக அண்ணா நகரில், ஒரு பயிற்சிக்கூடம் தொடர்ந்து நடத்தி, அதிலே மாணவர்களுக்கு பயிற்சி அளித்துக் கொண்டு வருகிறார்கள். ஆண்டொன்றுக்கு 60 இலட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டுமென்று அரசு நிர்ணயித்ததற்கு மாறாக, இப்போது 62,60,000 ரூபாய் செலவு செய்யக்கூடிய ஒரு சூழ்நிலையில், ஆண்டுதோறும் 200 பேருக்கு அந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், தமிழ்நாட்டில் கடந்த ஆண்டு திடீரென்று அதிகமான மாணவர்கள் தேர்ச்சிபெற்ற காரணத்தினால், இந்த ஆண்டு 6,106 பேர் அதற்காக விண்ணப்பம் செய்திருக்கிறார்கள். இதைக் கருத்தில்கொண்டு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பயிற்சியை இன்னும் பல இடங்களில் ஆரம்பித்தால், நன்றாக இருக்குமே என்ற ஒரு ஆலோசனையை வழங்கினார்கள். ஒவ்வொரு இடத்திலேயும், பயிற்சி கொடுப்பது என்றால் ஏராளமாகச் செலவாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் சொன்னதைப்போல, மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்திலேயும், கோவை பாரதியார் பல்கலைக்கழகத்திலேயும், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திலேயும் இப்படிப்பட்ட பயிற்சிகளைக் கொடுப்பதற்கு அங்கே இருக்கக்கூடிய துணை வேந்தர்களோடும், ஐ.ஏ.எஸ்., அதிகாரிகளோடும் மற்றும் பேராசிரியர்களோடும் கலந்து பேசி ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் 10 இலட்சம் ரூபாய் நிதி வழங்குவது என்றும், அதன்மூலம், மூன்று பல்கலைக்கழகங்களிலேயும் இப்படிப்பட்ட பயிற்சியை நடத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுப்பது என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில், மனோன்மணியம் சுந்தரனார்

பல்கலைக்கழகத்தில், இந்தப் பயிற்சியை இந்த ஆண்டே தொடங்குவதற்கு அனுமதி அளித்ததற்கு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மற்றும் மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோன்று மத்திய அரசு நடத்துகின்ற Indian Institute of Technology, Indian Institute of Management போன்ற உயர் கல்வி நிலையங்களைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில், சென்னையிலே I.I.T. இருந்தாலும், அந்தக் கல்லூரியிலே சேருகின்ற மாணவியர்களில் கிட்டத்தட்ட 2 சதவிகிதம் அல்லது 3 சதவிகிதத்திற்கு மேல் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. அதற்குக் காரணம், சரியான பயிற்சி வழங்கப்படவில்லை. அத்தகைய கல்லூரிகளில் சேர்வதற்கு எப்பொழுது விண்ணப்பிக்க வேண்டும், நுழைவுத் தேர்வு எப்பொழுது நடத்தப்படும் என்பதைக்கூட சாதாரண மக்களுக்கு தெரியப்படுத்தாமலேயே, குறிப்பிட்டவர்கள், வசதி படைத்தவர்கள் மட்டும் அந்தப் பயிற்சியைப் பெற்று அந்தக் கல்லூரியிலே, மத்திய அரசு நடத்துகின்ற அந்த உயர் ரக கல்லூரியிலே பயின்று வருகிறார்கள். ஆகவே, அதற்கும் மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்வுகளுக்குப் பயிற்சி கொடுத்தது போன்று, I.I.T., I.I.M., போன்ற மத்திய அரசு நடத்துகின்ற அந்தக் கல்லூரிகளிலும் சேர்வதற்கு எப்பொழுது விண்ணப்பிக்க வேண்டும், அதற்கு ஓரளவிற்கு எவ்வாறு பயிற்சி வேண்டும் என்பதையெல்லாம் அறிவிக்கும்வண்ணம் மாவட்டத்திற்கு ஒரு இடத்திலாவது அந்தப் பயிற்சியைக் கொடுக்கவும், எப்பொழுது விண்ணப்பிக்க வேண்டும் என்பதை விளம்பரப்படுத்தவும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த அந்தக் கருத்தை ஏற்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தைத் தொடர்ந்து வற்புறுத்தி, எப்பொழுதும் இல்லாத அளவிற்கு 3 பல்கலைக்கழகங்களை இந்த ஆண்டு மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்கி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்று

2009 பிப்ரவரி 24]

கோவையிலேயும், ஒன்று திருச்சியிலேயும், ஒன்று திருவாரூரிலேயும் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று, அந்தப் பணிகள் நடந்து வருகின்றன. இந்த மாதமே நம்முடைய மத்திய அமைச்சர் வந்து அந்த நிலையங்களைத் தொடங்கி வைப்பதாக இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையிலே இருக்கின்ற காரணத்தினாலே, அவ்விழா ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு அந்தப் பயிற்சிகளைக் கொடுப்பதற்கும், உரிய விளம்பரங்கள் செய்து மாணவர்கள் அத்தகைய கல்லூரிகளிலே சேர்வதற்கும் உரிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பில் நாம் பல காரியங்களைச் செய்கின்றபோது, தனியாரிடம் உதவி பெற்று செம்மைப்படுத்துவது நம்முடைய இயல்பாக இருக்கிறது. பொதுவாக, மருத்துவமனைகளைப் பராமரிக்கும்போதுகூட தனியார் துறையினுடைய துணையைக் கொண்டு நாம் செம்மைப்படுத்துகிறோம். அந்த வகையிலே தமிழ்நாடு இந்திய அரசுப் பணியிலே மேலோங்கி இருந்த ஒரு நிலையை மீண்டும் நிலைநாட்டுவதற்காக அரசாங்கத்திற்கு உறுதுணையாக தாராள மனப்பான்மை கொண்ட, நல்ல உள்ளம் படைத்த தனியார்களை ஊக்கப்படுத்தி, அவர்களையும் இந்தப் பணியிலே நம்மோடு சேர்த்துக்கொள்வதற்கு அரசாங்கம் ஊக்கப்படுத்துமா? ஏற்கெனவே சிவந்தி அகாடமி போன்ற பல அகாடமிகள் இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கின்றன. தனியாரை இந்தப் பணியிலே ஈடுபடுத்தி, இந்திய அரசுப் பணியிலே தமிழகம்தான் முதல் நிலை என்ற நிலைமையை மறுபடியும் தோற்றுவிப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.. போன்ற பணியிடங்களுக்கு பயிற்சி கொடுப்பதற்கு தனியார் யார் முன்வந்தாலும் அவர்களை ஊக்குவிக்க இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி தமிழகத்தில் பல்வேறு பல்கலைக்கழகங்களில் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும்; அது பரிசீலனையில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு நன்றி தெரிவிக்கிறேன். ஏற்கெனவே கடந்த ஆட்சிக் காலத்திலிருந்து தொடர்ந்து இந்தக் கோரிக்கையை நானும் என்னுடைய கட்சியின் சார்பில் வலியுறுத்தி இருக்கிறேன். அது நிறைவேறத்தக்க சூழல் இருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சிக்காக ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் தங்களை வளர்த்துக்கொள்வதற்கு உதவியாக சென்னையில் இருக்கக்கூடிய நூலகங்களில், குறிப்பாக கன்னிமரா, தேவநேயப் பாவாணர் நூலகங்களில் ஐ.ஏ.எஸ். மாணவர்கள் பயிற்சிக்கு என்று ஒரு தனி இடம் ஒதுக்கப்பட்டு நூல்களும் தரப்பட்டுள்ளன. இதேபோன்று தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய மாவட்ட, வட்டத் தலைநகரங்களில், கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மாணவர்களும் பயில்வதற்கு உதவியாக நூலகங்களில் ஒரு தனி இடம் ஒதுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதோடு இணைந்து, ஐ.ஐ.டி., மதுரையிலும் உருவாக்கப்படும் என்று முதல் கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்டிருந்தது. அது எந்த நிலையில் இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சரிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2, 3 ஆண்டுகளுக்கு முன்னாலே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுக்குப் படிக்கின்ற மையங்களிலே மாணவர்களுக்கு சரியாக நூலகங்கள் இல்லை என்ற தகவல் அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற்று, கடந்த ஆண்டு Part-II Scheme மூலமாக, இந்தத் துறைக்கு அமைச்சராக நான் இருக்கின்ற காரணத்தினாலே, முதலமைச்சரிடத்திலே விளக்கமாக இதை எடுத்துச் சொன்னேன். உடனடியாக 50 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்து, சென்னை,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2009 பிப்ரவரி 24]

அண்ணா நகரிலே இருக்கக்கூடிய அந்தப் பயிற்சிப் பள்ளியில் ஒரு நூலகம் அமைப்பதற்காக புத்தகங்கள் எல்லாம் வாங்கப்பட்டு, அங்கே மாணவர்கள் அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, கல்வித் துறையிலேயும் அதற்கான ஏற்பாடுகளை செய்து தந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, Library-ஐப் பொறுத்தவரையில் எந்தப் பிரச்சினையும் இப்போது கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலே எப்போது தொடங்கப்படும் என்று கேட்டார்கள். இந்த ஆண்டே அதைத் தொடங்குவதற்கான முயற்சிகளிலே அரசு ஈடுபட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிய அளவிலே வாழக்கூடிய ஒருங்கிணைந்த தஞ்சைத் தரணியில், நிரம்ப கலைக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் இருக்கின்றன; மருத்துவக் கல்லூரி ஒன்றும் இப்போது தலைவர் கலைஞர் ஆட்சியில் திருவாரூரில் தொடங்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி, பெரம்பலூர் போன்ற மாவட்டங்களில் அடுத்த தலைமுறை பயன்பெறக்கூடிய வகையில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், ஒருங்கிணைந்த தஞ்சைத் தரணியிலே சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கப்படுமா என்று கேட்டதற்கு, விளை நிலங்கள் அதிகமாக இருக்கின்ற பகுதிகளில் பின்பு பரிசீலிக்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இந்த அவையிலே பதில் சொல்லியிருக்கிறார்கள். இப்போது, கோவை, திருநெல்வேலி, மதுரை, திருச்சி போன்ற பகுதிகளில், ஆங்காங்கு இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்களை இணைத்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற தேர்வுகளுக்கு வகுப்புகள் எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதைப்போல விவசாயப் பெருங்குடி மக்கள் இருக்கக்கூடிய தஞ்சைத் தரணியில் டெல்டா மாவட்டப் பகுதிகளில் வசிக்கும் மாணவ, மாணவிகள் பயன்பெறக்கூடிய வகையிலும் தஞ்சையிலே தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பயிற்சி அளிக்க அரசு ஆவன செய்யுமா? நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிறந்த அந்த மாவட்டத்தில் இதைச் சிறப்பு இனமாக எடுத்து அரசு செயல்படுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2009 பிப்ரவரி 24

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் கட்டமாக மதுரையிலேயும், கோவையிலேயும், திருநெல்வேலியிலேயும் இந்தப் பயிற்சியை அளிப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இந்தப் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போதே பக்கத்தில் இருக்கக்கூடிய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பெரியார் பல்கலைக்கழகத்தை மறந்து விட்டீர்களா என்று கேட்டார்கள். இந்த அரசு எந்தப் பல்கலைக்கழகத்தையும் மறக்கவில்லை. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மற்ற பல்கலைக்கழகங்களிலேயும் இந்தப் பயிற்சியை அளிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு முன்பாக, முதல் கட்டமாக இந்த 3 மாவட்டங்களிலே, காமராஜர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் போன்ற இந்தப் பல்கலைக்கழகங்களில் நடத்தி, எப்படி இந்தப் பயிற்சியை வெற்றிகரமாக நடத்துகிறார்கள் என்பதைப் பார்த்துவிட்டு, அடுத்தகட்டமாக மற்ற பல்கலைக்கழகங்களிலேயும் இதைத் தொடங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சந்திரகாசி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

52—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***47568—திரு. மா. சந்திரகாசி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், கொளக்காநத்தம் பகுதியில் பருத்தியைக் கொள்முதல் செய்வதற்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,